முருகப்பெருமான் துணை

**மகான் வரரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.04.2024**, செவ்வாய்கிழமை

1. வரம் தந்து கலியுகமக்களை
   வாழவைக்க வந்த வள்ளலே
   அறம் நிறைந்த ஞானவழிகாட்டி
   அருளுகின்ற ஞான வள்ளலே
2. வள்ளலே உன் பெருமை கூறி
   வரமென குரோதி தகர் திங்கள்
   வல்லமைமிக்க சூலதிகதி குசன் வாரம்
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 03 ம் நாள், 16.04.2024, செவ்வாய்கிழமை)
   வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை வரரிஷி யானும்
   அருளுவேன் உலகநலம்பெற
   வாசிவென்ற ஞானிகள் படை
   வரமீந்து அரங்கனுடனிருக்க
4. இருக்கவே சூட்சுமம் அறிந்து
   இவ்வுலக மக்களெல்லாம் சேர்ந்து
   கருத்தாக அரங்கனை தேடி
   கட்டாயம் வணங்கி தீட்சை ஆசிபெற
5. ஆசிபெற வினைகள் விலகும்
   ஆபத்து கண்டமும் அகலும்
   வாசிவென்ற ஞானிகள் பேரில்
   வலுவான பூசை செய்து தொடர்ந்து
6. தொடர்ந்து பிரணவக் குடிலுக்கு
   தொண்டர்களாக வந்திணைந்து
   இடர்வெல்லும் சூட்சுமம் பலவும்
   இலகுவாய் அரங்கனால் தேறி
7. தேறியே சாமானியர்களும் கூட
   தெய்வ பலமிக்க தொண்டர்கள் ஆகி
   வருங்காலச் சுமை நீக்கியே
   வசதிவளம் உலகுக்குத் தருக

8. தருகவே அரங்கன் பாதை
தருமத் தயவுபாதை தன்னால்
முருகா என முழங்கி வர
முழுமை ஞானம் தா என வேண்டி

9. வேண்டி வர உலகமெங்கும்
வேலவன் சக்தி வெளிப்பட்டு
தொண்டு வழி தொண்டர்களாகி
தேசிகனால் தேர்வு செய்யப்பட்டு

10. செய்யப்பட்டு கலியுகத்தினில்
சேவைவழி அனைத்து பேரும்
மெய்ஞானம் கண்டுத் தேறி
மேலவர்கள் மெச்ச வாழ்வில்

11. வாழ்வினில் சகல வளமும்
வரமாக பெற்றுச் சிறந்து
ஊழ்வெல்வர் உலகையே வெல்வர்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—